**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1(ஆ) இன் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு செய்யப்பட முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்காக ரூபா 4,552,630 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,650,947 ஆன நூலக புத்தகங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,997,392 ஆன நூலக புத்தகங்கள் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றில் கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் முன்னைய காலப்பகுதிகளின் பிழைகளாக ரூபா 86,578,638 வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்களில் வரவு வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 84,573,045 ஆனமையால் ரூபா 2,005,593 இனால் ஆரம்ப மீதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் ஆண்டின் விரிவான வருமானம் ரூபா 972,493,885 ஆக இருந்த போதிலும், அந்த மீதி தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் ரூபா 976,156,225 ஆக ரூபா 3,662,340 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தாமத வழுக்களினால் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து மாற்ற முடியாதிருந்த போதிலும், அதன் கீழ் ரூபா 1,032,445 காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு பிரதான நகர பொறியியலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மீதி என்ன என்பதை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | பேலின் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும், அதற்காக ரூபா 1,500,000 கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு செய்யப்பட்டமையால் செலவினக் கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் கணக்கு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது, | தவறினால் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023 இன் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய மீதி பெயர் பதாதை கட்டணமாக ரூபா 1,500,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் போது அந்த பணம் சபைக்கு கிடைத்திருந்தது. | எதிர்காலத்தில் சரியாக தயாரிக்கப்படும். | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டிற்கான மிகையில் காணப்பட்ட ரூபா 279,873,451 ஆன முதலீட்டு வருமானம் செயற்பாடுகளின் கீழ் வருகின்ற காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது அகற்றப்பட வேண்டியதாக இருந்த போதும், அவ்வாறு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | குறுகியகால செலுத்த வேண்டியவைகளின் கீழ் குறைவான ரூபா 319,857,977 செயற்பாட்டு நடவடிக்கைளில் உருவான காசுப்பாய்ச்சல் குறைவடைந்தமை தொடர்பில் தாக்கமளித்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டிய போது அப்பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தலின் பெறுமதியான ரூபா 34,801,378 பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் உருவான காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது ரூபா 382,942,786 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஔ) | வருமானப் பொழிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 199,060,055 ஆன முதலீட்டு வருமானம் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது சேர்க்கப்படாமையினால் முதலீட்டு செயற்பாடுகளில் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியான குறைவடைந்திருந்தது. | | |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கணக்கு விடயங்களுக்குரிய பேரேட்டு கணக்கு மீதிக்கும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 31,290,635 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் உரியவாறு சரிசெய்யப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய பட்டோலைகள்/ அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 14,213,887 வேறுபாடு காணப்பட்டது. | -மேற்படி- | நிதிக் கூற்றுக்களின் மீதியையும் உபயோக பதிவேடுகளின் மீதியையும் இணக்கம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பொருள் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் மென்பொருள் சொத்துக்கள் கணக்குகளில் ஆரம்ப மீதியிலும் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கில் ரூபா 11,016,840 சீராக்கப்பட்டிருந்ததுடன், அந்த சீராக்கம் தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எந்தவொரு மூல பதிவேடும் பரிசீலினை இன்றி மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | கணக்குகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களுக்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக 05 கணக்கு விடயங்களில் ரூபா 24,355,985 ஆன பெறுமதி | எதிர்காலத்தில் இது தொடர்பாக தகவல்களை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆம் அதிகாரம்) | | | |
| (i) | 218 ஆம் பிரிவு | நகர பிதாவினால் சபையின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான கூற்றுக்களையும் உள்ளடக்கி சபையின் நிர்வாகம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று தயாரித்து சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தயாரிக்கப்படுவதுடன், கூடிய விரைவில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படும். | நிர்வாக அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 266 (அ) பிரிவு | அமைச்சரின் அங்கீகாரம் இன்றி வியாபார அனுமதிப் பத்திரம், கைத்தொழில், வியாபார வரி, அறிவித்தல் பதாதைக் கட்டணம் மற்றும் வாகன தரித்து வைத்தல் கட்டணம் போன்ற 04 வருமானத் தலைப்புகளுக்கு உரிய ரூபா 2,760,440 நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | சபை அங்கீகாரத்தை பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைகள் நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை | | | |
| (i) | 12(xii) ஆம் கட்டளை | நான்கு வருட அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நான்கு வருட அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நான்கு வருட அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 42 மற்றும் 44 ஆம் கட்டளை | ஆதனங்கள் மெம்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கைகளின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது மாநகர சபைக்கு சொந்தமான ஆதனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆதனங்களின் சட்ட ரீதியான தன்மையை உறுதிப்படுத்தியதன் பின்னர் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு உள்ளபடியான சதுர அளவினை இனங்கண்டு அறிக்கையினை தயாரித்து விரைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படும். | ஆதனங்களின் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 274 ஆம் கட்டளை | சேவை செயலாற்றல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த அறிக்கையை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | 08 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டட ரூபா 176,130 ஆன முற்பணத்தை தீர்ப்பதற்காக 05 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையாக காலம் எடுத்திருந்தது. | அதில் எதிர்வரும் முற்பணங்கள் பெற்றதன் பின்னர் பணிகள் நிறைவு பெற்றவுடன் அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை ஈடுபடுத்தப்படும் என அறிக்கையிடுகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,532,497 மல போக்குவரத்து வைப்பு ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்க வில்லை. | இந்த மல போக்குவரத்து வைப்பு கொடுப்பனவுகள் எமது சேவைப் பங்களிப்பாளர்களின் VAT வரி அறவிடப்படாதிருந்ததுடன், நீர் வழங்கல் சபை எங்களிடம் இருந்து | -மேற்படி- |

VAT வரி அறவிட்டமையினால் VAT வரி செலுத்துதல் தொடர்பாக தீர்மானம் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 976,156,225 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,820,661 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டின் மே மற்றும் யூன் மாதங்களின் சம்பளம் செலுத்துவதற்காக முறையே 2022 மே 24 ஆம் திகதி ரூபா 30,000,000 மற்றும் 2022 யூன் 23 ஆம் திகதி ரூபா 40,000,000 ஆன நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைவதற்கு முன் இரத்துச் செய்யப்பட்டு பணம் பெறப்பட்டிருந்தது. இவ்வாறு முதிர்ச்சியடைவதற்கு முன் நிலையான வைப்பு இரத்துச் செய்யப்பட்டமையால் ரூபா 2,675,345 வட்டி வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. மேலும் சம்பளம் செலுத்துவதற்கு குறித்த திகதி உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து பணம் கிடைத்திருந்ததுடன், சபையினால் சம்பளம் செலுத்துவதற்கு நிர்ணயித்த திகதிக்கு முன்னர் சம்பளம் செலுத்தியதன் காரணமாக இவ்வாறு நிலையான வைப்பு இரத்துச் செய்வதற்கு காரணமாக இருந்தது. | எங்களால் வங்கிக்கு சம்பளம் செலுத்துதல் Slip முறைமை ஊடாக இருந்தமையால் அதன் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் சம்பளம் ஊழியர்களின் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்காக அதற்கு முன்னைய தினம் Slip மூலம் அனுப்புதல் கட்டாயமாகும். ஏதாவது வட்டியொன்று சபைக்கு இழக்கப்பட்ட போதிலும், சம்பளம் செலுத்துதல் எந்தவொரு வகையிலும் தாமதிக்க முடியாத கொடுப்பனவாக இருந்தமையால் அந்த சந்தர்ப்பத்தின் போது எடுக்க முடியுமாக பிரச்சினைகளுக்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எங்களால் வருடாந்தம் நிலையான வைப்பு முதலீட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட கணிசமான வருமானத்தை ஒப்பிடும் போது இந்த இழக்கப்பட்ட வட்டி வருமானம் மிகவும் குறைந்த பெறுமதியாகும். | சம்பளம் செலுத்துவதற்கு குறித்துரைத்த திகதி உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து பணம் கிடைத்துள்ளது. சபைக்கு நட்டம் ஏற்படாத வகையில் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி மக்கள் வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 500 மில்லியன் பெறுமதியான 51 நிலையான வைப்புக்கள் மாற்றப்பட்டு அத்தினமே ரூபா 600 மில்லியன் தொகையில் தேசிய சேமிப்பு வங்கிக்கு காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த ரூபா 600 மில்லியன் தொகை 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி ரூபா 50,000,000 வீதம் 12 நிலையான வைப்புக்களாக தேசிய சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 600 மில்லியன் சபை நிதியம் 06 நாட்கள் வட்டி உழைக்கப்படாமல் வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | இந்த ரூபா 600 மில்லியன் தொகை தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக் கணக்கில் வைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போட்டி அரசாங்க வங்கிகளுக்கு இடையே அதிக வட்டி சதவீதம் அவர்களினால் வழங்குவதற்கு இணங்கியிருந்தமையினால் ஆகும். இதன் போது 06 நாள் வட்டி வருமானம் இழக்கப்பட்ட போதிலும், இந்த இழக்கப்பட்ட வருமானத்தை விட கணிசமான தொகையொன்று உயர்ந்த வட்டியொன்றின் கீழ் முதலீடு செய்யக் கூடியதாக இருந்தது. | பணம் விளைவற்றதாக வைக்கப்படாமல் முதலீடு செய்து வட்டி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | **430,000** | **409,571** | **347,132** | **630,171** | **420,000** | **387,752** | **339,513** | **483,881** |
| (ii) | வாடகை | **27,982** | **16,222** | **20,687** | **20,107** | **16,500** | **4,880** | **12,226** | **6,959** |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | **9,435** | **5,000** | **3,915** | **5,130** | **22,250** | **21,844** | **14,558** | **100,430** |
| (iv) | ஏனைய வருமானம் | **532,788** | **926,392** | **923,032** | **936,406** | **525,900** | **15,457** | **276,022** | **16,842** |
| | மொத்தம் | **1,000,205** | **1,357,185** | **1,294,766** | **1,591,814** | **984,650** | **429,933** | **642,319** | **608,112** |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதன வரி** | | |
| (i) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானம் ரூபா 388,176,867 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 164,669,497 தொகை அதாவது, 42 சதவீதம் (42%) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இந்த பணம் மிகை சிட்டையிடப்பட்டதால் ஏற்பட்டிருந்தமையால் ஆகும். 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் நிலுவையில் ரூபா 50,928,302 தொகை அறவிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மாதாந்த வருமானம் மற்றும் நிலுவை அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டின் நிலுவை ஆதன வரியை ரூபா 483,885,527 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 106,083,319 அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 377,802,208 அதாவது, நூற்றுக்கு எழுபத்தெட்டு சதவீதம் (78%) அறவிடுவதற்கு தவறியிருந்தது. | மிகை சிட்டையிடல் மற்றும் கடந்த காலத்தில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் கெரோனா தொற்று நோயினால் ஆதனங்களை தடை செய்யாமையின் அடிப்படையில் நிலுவை அதிகரித்திருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதன வரி அறவிடக் கூடிய ஆதனங்கள் 87749 ஆக காணப்பட்டதுடன், அதில் 44650 ஆதனங்களில் ரூபா 532,240,119 ஆதன வரி நிலுவையாக காணப்பட்டது. இந்த நிலுவையில் ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையிலான பெறுமதியுடைய 870 ஆதனங்களில் இருந்து ரூபா 61,214,326 தொகையும், ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய 729 ஆதன வரி அலகுகளில் இருந்து ரூபா 252,739,249 தொகையும் அறவிட வேண்டியிருந்தது. | ரூபா 50,000 இற்கும் மற்றும் ரூபா 100,000 இற்கும் அதிகமான ஆதனங்களுக்காக மிகை சிட்டையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ள அளவை இனங்கண்டு தற்போது அறிக்கையொன்று தயாரிக்கப்படுகின்றது. மிகை மதிப்பீட்டு தொகை சரியாக கணிப்பிடப்பட்டு முகாமைத்துவ குழுவிற்கு அனுப்பி பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) **வியாபார மற்றும் கைத்தொழில் வரி** | | |
| (i) மீளாய்வாண்டிற்குரிய கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரியின் கீழ் காணப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பாக மேன்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இறுதி தடவையாக மேன்மையாய்வு 2018/2019 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 8000 ஆதனங்களின் அளவு காணப்பட்டது. வருமான பரிசோதகர்களின் பற்றாக்குறை சபையில் உள்ளமையினால் இந்த மேன்மையாய்வை வருடாந்தம் மேற்கொள்வதற்கு வசதியீனமாக இருந்தது. 2023 ஆம் ஆண்டில் இருந்து இந்த மெய்மையாய்வு ஆரம்பிக்கப்படும். | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 95,006,513 நிலுவை வியாபார மற்றும் கைத்தொழில் வரி மீதியில் ரூபா 11,894,581 அதாவது பதிமூன்று சதவீதம் (13%) மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. | இந்த நிலைமை மிகை சிட்டையிடலின் காரணமாக ஏற்பட்டிருந்தது. மிகை சிட்டையிடல்களை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) **கழிவுப் பொருள் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கழிவுப் பொருள் வரி வருமானம் ரூபா 14,560,240 ஆக காணப்பட்டது. | இந்த நிலுவை தொகையில் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 2,597,457 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) **ஏனைய வரிகள்** | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை கேபள் டீ.வி. வருமானம் ரூபா 4,433,435 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நிலுவை பணத்தை அறவிடுதல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுத்தல் வசதியீனமாக இருந்ததாக சட்ட உத்தியோகத்தர் அறிவித்திருந்தார். அதன் பிரகாரம் நிலுவை பணத்தை பதிவளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) **கடை வாடகை** | | |
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை கடை வாடகை மீதியான ரூபா 18,429,725 தொகையில் ரூபா 12,983,389 அதாவது, எழுபது சதவீதம் (70%) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | பதிவழிப்பதற்கோ அல்லது கடையினை முத்திரை வைப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நீண்ட காலம் நிலுவை வாடகை காணப்பட்ட 60 கடைகளுக்கு முத்திரை வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த கடைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 2,203,484 ஆகும். அந்த கடைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அந்த கடைகளை கையேற்று வேறுதரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் சில கடைகள் கேள்வி கோரி வழங்கப்பட்டுள்ளது. சில கடைகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. | கடைகளை வேறுதரப்பினருக்கு கையளிப்பதற்கும் மற்றும் நிலுவையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) **ஆதன வாடகை (குத்தகை)** 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வாடகை மீதியான ரூபா 6,482,383 தொகையில் ரூபா 5,889,644 அதாவது தொன்னூத்தி ஒரு சதவீதம் (91%) ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்ல. | 2023 ஆம் ஆண்டின் உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னர் அறவீடுகளை கவனத்தில் கொள்ளக் கூடிய சதவீதம் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) **வியாபார அனுமதிப் பத்திர கட்டணம்** | | |
| (i) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வியாபார அனுமதிப் பத்திர வருமானம் ரூபா 9,435,000 ஆக இருந்ததுடன், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,914,569 ஆகும். அது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் நாற்பத்தி ஒரு சதவீதம் (41%) மாத்திரம் ஆகும். | கொவிட் மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் பிரகாரம் 2022.12.31 ஆம் திகதி வரை வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காணப்படுவதற்கு காரணமாகும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதி பத்திரம் விநியோகிக்க வேண்டிய 1887 விற்பனை கடைகள் காணப்படுகின்றமை காண்பிக்கப்பட்ட போதிலும், 577 விற்பனை கடைகளுக்காக மாத்திரம் வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 1310 வியாபார கடைகள் அனுமதிப் பத்திரம் பெறாமல் வியாபாரத்தை நடாத்திச் சென்றிருந்தது. | தற்போது வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் மேற்கொள்ளப்படாத நிறுவனங்கள் தொடர்பாக தற்போது நடாத்திச் செல்லப்படுகின்ற மெய்மெய்யாய்வின் பிரகாரம் வியாபார அனுமதிப் பத்திரம் பெறாத வியாபார நடவடிக்கைகளை செய்கின்ற நிறுவனங்களை இனங்காண முடியும். | அனுமதிப் பத்திரம் பெறாத வியாபாரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | **அறிவித்தல் பதாதை வருமானம்**<br>மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய விளம்பர அறிவித்தல் பதாதை கட்டணம் ரூபா 18,129,643 ஆக இருந்ததுடன், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 5,548,550 தொகை, ரூபா 7,648,100 மற்றும் ரூபா 4,732,858 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 02 வருடங்களை விஞ்சிய கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 13,196,650 ஆகும். | வருமான பரிசோதகர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையினால் மைமையாய்வு இறுதி தடவையாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன், சபை தீர்மானம் ஒன்றை எடுத்து அதனை பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் அநேகமாக குறைபாடுகள் காண்பபட்டது. இதனால் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டி ஏற்பட்டிருந்தது. சரியான தரவுகளை இனங்கண்டு நீதிமன்றத்தில் உள்ள பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன், நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஐ) | **நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாரு கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப் பணம் ரூபா 24,235,150 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 884,997,614 ஆகும். | நீதிமன்ற தண்டப் பணத்தில் ரூபா 4,565,499 தொகை கஹ்கொடவில நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. கல்கிஸ்ஸ நீதிமன்றத்திற்குரிய ரூபா 2,434,567 மாகாண இறைவரி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் - திசெம்பர் | உரிய காலப் பகுதியில் பெற வேண்டிய பணத்தை கணிப்பிட்டு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெற்றுக் கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| | பட்டோலைகள் தயாரிக்கப்படுகின்றது. முத்திரைக் கட்டண நிலுவை பணத்தில் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 512,746,370 கிடைக்கப் பெற்றுள்ளது. | வேண்டும். |

**2.4 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 1974 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,340,379 அறவிட வேண்டியிருந்தது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) சமையலறை கழிவுகளை அகற்றுதல்** | | |
| (i) கறதியான கழிவுப் பொருள் தளத்தில் சமையலறை கழிவுகளை அகற்றும் கட்டணம் 2021 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 01 மெற்றிக் டொன் இற்காக ரூபா 250 முதல் ரூபா 1,000 வரை உயர்வடைந்து சென்றதுடன், மீளாய்வாண்டின் போது 15974 கழிவுப் பொருள் டொன்களை அகற்றுவதற்காக ரூபா 15,974,110 | அதிகார பிரதேசத்தில் சனத்தொகை அதிகரிப்பதுடன், உருவாகின்ற கழிவுப் பொருட்களின் அளவும் அதிகரித்துள்ளது. 01 டொன்களுக்காக அறவிடல் ரூபா 250 முதல் ரூபா 1,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ii) | சபைக்கு செய்வதற்கு ஏற்படுகின்ற கிரயங்களை குறைத்துக் கொள்வதற்காக கழிவுகளை வளம் ஒன்றாக பயன்படுத்திக் கொள்வதற்காக அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற சமையலறை கழிவுகளை விலங்கு உணவுகளாகவும் மற்றும் கூட்டுப் பசளையாகவும் விற்பனை செய்வதற்காக ரூபா 79,218 செலவிடப்பட்டு 2021 ஒக்டோபர் 07 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து 2021 ஒக்டோபர் 27 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை 2021 திசெம்பர் 01 ஆம் திகதி பொதுச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், கேள்வி தாரர்களுடன் 2023 மார்ச் 15 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | கேள்விதாரர்களுடன் உடன்படிக்கை செய்யும் போது வியாபார பதிவுச் சான்றிதழ் மற்றும் வங்கி பிணைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. ஒரு கேள்விதாரர் மாத்திரம் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்திருந்ததுடன், அதன் பிரகாரம் அவருடன் 2023.03.15 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களில் இருந்து வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுதல்**<br>CFL மின்குமிழ், டம்பர்ட் கண்ணாடி, தகரம், வேல் செய்யக் கூடிய கலவை பொலித்தீன், வேல் செய்யப்பட்ட அலுமினிய துண்டுகள், அலுமினிய உணவு உறைகள், பயன்படுத்தப்பட்ட பழைய டயர், இரப்பர் சார்ந்த உற்பத்திகள், மரக்கிளைகள், துண்டங்கள், மரப்பகுதிகள், சகல வகையான இலத்திரனியல் கழிவுப் பொருட்கள், அகற்றப்படுகின்ற பற்றூரிகைகளை சேகரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான முறைமையொன்று சபையினால் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூறுவிலை கோரப்பட்ட போதிலும், எந்த ஒருவரும் கூறுவிலை சமர்ப்பித்திருக்கவில்லை. மீண்டும் 2023.04.06 ஆம் திகதி கூறுவிலை கோரப்பட்ட போதும் அதன் போதும் எந்தவொரு கேள்விதாரரும் முன்வந்திருக்கவில்லை. | உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் மீளாய்வாண்டின் போதும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் உரிய படிவத்தில் உள்ளடக்கிக் கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதனை பதிவேடுகளுக்கு கொண்டுவந்ததன் பின்னர் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 நவம்பர் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடிக்குரிய ரூபா 145,496 நட்டம் அதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அது வங்கி இணக்கக் கூற்றில் நிதி குறைவான வைப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பான ஒழுக்காற்று கட்டளை சபைக்கு கிடைத்தமையினால் அந்த கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும். | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கழிவுப் பொருட்களை அகற்றும் கட்டணம் செலுத்தாமையின் காரணமாக கேள்விதாரரால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்காக 2012 யூன் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பிணக்குகள் தீர்க்கும் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 20,958,779 மற்றும் நட்டஈடாக ரூபா 300,000 ஆக மொத்த தொகை ரூபா 21,256,779 தொகை வான்ஷ் நிறுவனத்திற்கு சபையினால் செலுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த பிணக்குகள் தீர்க்கும் தீர்ப்பிற்கு எதிராக சபையினால் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கும் எதிராக சபையினால் சிரேஷ்ட மேல் | 2012 இல் வெளியிடப்பட்ட பிணக்குகள் தீர்க்கும் தீர்ப்பின் பிரகாரம் சபையினால் ரூபா 21,256,779 வான்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. பிணக்குகள் தீர்க்கும் தீர்ப்பிற்கு எதிராக நீதிமன்றத்தால் தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. வான்ஸ் கம்பனி ரூபா 18 மில்லியன் தொகைக்கு சமரசத்திற்கு இணங்குவதாக வெளியிட்டிருந்தது. இந்த வழங்கு 2023.07.06 ஆம் திகதி மீண்டும் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து சமரசத்திற்கு வருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு 2021 திசெம்பர் 07 ஆம் திகதி கோரப்பட்ட சந்தர்ப்பத்தின் போது வான்ஸ் கம்பனி ரூபா 18 மில்லியன் தொகைக்கு இணங்குவதற்கு ஏற்றுக் கொண்டு விருப்பம் தெரிவித்திருந்தது. எனினும், சபையினால் தமது அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | காணி, கட்டிடம், வீதிகள், மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களை வழங்குமாறு பிரதான நகர பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தகவல்கள் கிடைத்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்படாத வேலையான ரூபா 174,788,597 காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 169,614,023 ஆன ஒப்பந்த பணிகள் 2017 முதல் 2021 வரையான ஆண்டுகளில் கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஒப்பந்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எந்தவொரு செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படாமல் கைவிடப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறு செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தலும் குறிப்பிடப்பட்டுள்ளது. | ஒப்பந்தங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கும் மீதிகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பாதுகாப்பு சேவையினை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022/2024 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்ளும் போது சட்ட ரீதியாக ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்வி தாரருக்கு கேள்வி கையளிக்கப்படாமல் 06 வது கூறுவிலை சமர்ப்பித்த கேள்வி தாரருக்கு கேள்வி கையளித்ததன் காரணமாக சபை நிதியத்திற்கு மாதாந்தம் ரூபா 96,600 மேலதிக செலவினத்தை செய்ய வேண்டியிருந்தது. | இந்த கோவை குற்றப்புலனாய்வு ஆணைக்குழுவிற்கு பொறுப்பில் உள்ளதனால் பதிலளிப்பதற்கு கோவை தேவையாகும். அது தொடர்பான கடிதம் கோவையில் உள்ளது. | சபைக்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளின் பிரகாரம் தகுதியான கேள்வி தாரரை தெரிவு செய்தல் வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜனனத விழா மண்டபத்திற்காக 2022 செப்டம்பர் 29 ஆம் திகதி ரூபா 2,408,963 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட 03 வழிப்பதனாக்கி இயந்திரங்கள் மின்சாரம் பெற்றுக் கொள்ளப்படாமையின் காரணமாக பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. | மின்சார சபைக்கு சொந்தமான தேவையான மின்மாணி மற்றும் பொருத்துவதற்கு தேவையான உப பாகங்கள் காணப்படாமையினால் செயற்பாடுகள் தாமதமடைந்திருந்தது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்
**சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி பிரிவினால் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மேன்மையாய்வின் பிரகாரம் சபைக்குரிய காணியாக 101 காணிகள் இனங்காணப்பட்ட போதிலும், அவற்றிக்குரிய உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அளவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை உரித்து உறுதிப்படுத்தப்படாத சில காணிகளுக்கு எந்தவொரு தகவல்களும் காணப்படாத காணிகள் ஆகும். | சபைக்குரிய காணிகளை இனங்கண்டு உரித்துறுதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுச் சென்ற, மரணதடைந்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற 163 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 15,029,458 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வுபெற்றுச் சென்ற 72 பேர்களிடம் இருந்து ரூபா 7,443,197 தொகை ஓய்வூதிய திணைக்களத்தில் இருந்து அறவிடுவதற்கு உள்ளது. தற்போது ரூபா 1,454,369 தொகை அறவிடப்பட்டுள்ளது. மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 222,048 கிடைத்துள்ளது. வேலை நீக்கம் செய்யப்பட்ட 26 உத்தியோகத்தரிடம் இருந்து பிணையாளரிடம் இருந்து மாதாந்த தவணையாக அறவிடப்படுகின்றது. உரிய சகல கடன் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாலுகையும்**

**நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 08 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டின் நிதியாண்டின் அடுத்து வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபரிக்கு 14 நாட்கள் தாமதத்துடன் 2023 மார்ச் 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் தயாரிக்கும் உத்தியோகத்தர் சேவையை விட்டுச் சென்றதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் வருடாந்த கணக்குகள் தாமதம் இன்றி சமர்ப்பிக்கப்படும். | உரிய திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |